## தமிழ்நாடு தலை குனியாது!

# ஓ.பன்னீர்செல்வம் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்!



### மாவட்டக் கழகச் செயலாளர் அறிவிப்பு!

| தேதி | நேரம் | தொகுதி | ஒன்றிய/ நகர/ பேரூர் | இடம் |
|---|---|---|---|---|
| மார்ச். 22 | காலை 9.00 மணி | மானாமதுரை (தனி) | இளையான்குடி ஒன்றியம் | எம்.ஜி.எஸ்.மஹால், புதுக்குடி, இளையான்குடி |
| மார்ச்.22 | மாலை 4.00 மணி | சோழவந்தான் (தனி) | மதுரை ஒன்றியம் | சோழவந்தான் |
| மார்ச். 23 | காலை 9.00 மணி | கம்பம் | உத்தமபாளையம் ஒன்றியம் கம்பம் நகரம் | கவிதா தாமோதரன் மண்டபம், சின்னமனூர் |
| மார்ச். 24 | மாலை 4.00 மணி | பெரியகுளம் (தனி) | பெரியகுளம் ஒன்றியம். தேனி நகரம், தென்கரை பேரூர் | தேனி |
| மார்ச்.24 | இரவு 7.00 மணி | போடிநாயக்கனூர் | சின்னமனூர், தேனி ஆகிய ஒன்றியங்கள் பழனிசெட்டிபட்டி, பூதிப்புரம், மார்கேயன்கோட்டை ஆகிய பேரூர்கள் | போடிநாயக்கனூர் |

**சிவகங்கை மாவட்டச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன், மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் பி.மூர்த்தி, தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க.தமிழ்ச்செல்வன், தேனி தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன் ஆகியோர் அறிவித்துள்ளனர்.**

# கழகத் தலைவரின் கட்டளைப்படி சமூக வலைதளங்களில் களமாடுவோம்!

## தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகளுக்கு – அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அறிவுறுத்தல்!

DMK IT WING

“வெற்றி நிச்சயம் அதை அடைவதற்கான இலக்கை அடைவதற்கு எவ்வித சமரசமுமின்றி இயக்கத்திற்காக உழைப்பது ஒன்றே இலட்சியம்” என்று உடன்பிறப்புகளுக்கு கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் எழுதியுள்ள ‘உங்களில் ஒருவன்’ கடிதத்தில், **“கழகத் தகவல் தொழில்நுட்ப அணியினர் ஒவ்வொரு நாளும் சமூக வலைதளங்களில் கழக அரசின் சாதனைகளைப் பதிவிட்டு அதனை அனைத்துத் தரப்பு மக்களிடமும் கொண்டு சேர்க்க வேண்டும்”** என நமக்கு கட்டளையிட்டுள்ளார்.

கழகத் தலைவரின் ஆணையை ஏற்று தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் அனைவரும் நம் தலைவர், இளம் தலைவர், அறிவாலயம், ஐ.டி.விங் உள்ளிட்ட சமூக வலைதளப்பக்கங்களில் பதிவிடப்படும் செய்திகளை உடனுக்குடன் பகிர்வதுடன், மாவட்ட அளவிலான சமூக வலைதளப்பக்கங்களில் பதிவிடப்பட்டுள்ள கழக அரசின் சாதனைகளையும் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்.

பதிவுகளில் கண்ணியமான வார்த்தைகள் இடம்பெற வேண்டும். தனிநபர் தாக்குதலோ, பெண்களைப் பற்றிய விமர்சனமோ கண்டிப்பாக தவிர்க்கப்பட வேண்டும். மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். தங்கள் பார்வையில் இது போன்ற பதிவுகள் கண்ணில் பட்டால் அணியின் HR team இடம் தெரிவிக்கவும். அணியின் வாட்ஸ்ஆப் சேனலை அனைவரும் பின்தொடர்ந்து, அதிலுள்ள பதிவுகளை அவரவர் வாட்ஸ்ஆப் குரூப்களில் பதிவிட்டு, கடைக்கோடி மக்கள் வரை கழகத்தின் சாதனைகளைக் கொண்டு சேர்க்க வேண்டும்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை
நாள் : 20.3.2026

**முனைவர் டி.ஆர்.பி.ராஜா**
செயலாளர்
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி

# திருவொற்றியூரில் ஆலோசனைக் கூட்டம்!

சென்னை, மார்ச்.22–

கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மற்றும் இளந்தலைவர் துணை முதல்வர் அவர்களின் ஆணையேற்று தொழில்துறை அமைச்சர் தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. வழிகாட்டுதலில் திருவொற்றியூர் மேற்கு பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் முன்னிலையில் தகவல் தொழில்நுட்ப அணியின் சென்னை மண்டல பொறுப்பாளர் சி.எச்.சேகர் மேற்பார்வையில் ராமகிருஷ்ணா நகர் 3 வது பிரதான சாலையில் உள்ள பகுதி கழக அலுவலகத்தில் 17–3–2026 அன்று மாலை தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சென்னை வடகிழக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் எஸ்.ஏ. சீனிவாசன் (DC) அவர்கள் பங்கேற்று சட்டமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகளின் பணிகள் குறித்து விரிவாக ஆலோசனை வழங்கினார்.

மேலும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வெல்லும் தமிழ் பெண்கள் பரப்புரையின் போது நமது திராவிட மாடல் அரசின் சாதனைகளை பொது மக்களிடம் எளிய முறையில் எடுத்துரைத்து 100% பரப்புரையை முடிப்பது குறித்தும் மற்றும் கழக ஆக்க பணிகள் குறித்தும் ஆலோசனை வழங்கினார்.

திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதி ஒருங்கிணைப்பாளர் எஸ். ராஜேஷ் (AC) ஏற்பாட்டில் நடைபெற்ற இக்கூட்டத்தில் (AC–1, AC–2, AC–3,) பகுதி ஒருங்கிணைப்பாளர்கள் மா.சுந்தர், ச. வரும், பி. வித்யா வட்ட ஒருங்கிணைப்பாளர்கள் காயத்ரி, ராஜேஸ்வரி, பிரியா, மதன், பிரதீப், விக்னேஷ், கார்த்திக், கலைவாணன், பிரவீன் விக்னேஷ் மற்றும் BDA கள் உள்ளிட்ட நிர்வாகிகள் திரளாக பங்கேற்றனர்.

## தமிழ்நாடு vs டெல்லி என்பது நிரூபணம்!

# எதிர்க்கட்சியினர் டெல்லியில் முகாமிட்டிருப்பது மக்கள் நலனுக்காகவா?

**தேர்தல் களத்தை எதிர்கொள்வதற்கான முடிவுகளைக்கூட டெல்லியே எடுக்கும் நிலை, இனி, டெல்லியின் முடிவே அவர்களது முடிவு!**




தமிழ்நாடு VS டெல்லி என்பதை முன்வைத்துதான் இந்தத் தேர்தல் களம் என்று நாம் சொல்வதை நிரூபிப்பது போலவே, டெல்லியில் இருந்துதான் எல்லாம் முடிவு செய்யப்படுகிறது.

எதிர்க்கட்சித் தலைவரும் அவரது சகாக்களும் டெல்லியில் இருப்பது எதற்காக? தமிழ்நாட்டிற்கு வழங்கப்படாமல் வஞ்சிக்கப்படும் நிதியை வாங்கித் தருவதற்காகவா? தமிழ்நாட்டில் நிறைவேற்றப்படாமல் முடக்கப்பட்டிருக்கும் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்துவதற்காகவா? சமையல் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாட்டைப் போக்குவதற்காகவா? இல்லை.. இல்லை.. இல்லவே இல்லை.

தேர்தல் களத்தைச் சந்திப்பதற்கே டெல்லியின் சம்மதம் வேண்டும் என்ற நிலையில் உள்ளவர்களின் கைகளில் தமிழ்நாடு சிக்கிக்கொண்டால் ஒவ்வொரு நாளும் என்ன பாடுபட வேண்டியிருக்கும் என்பதை உணர்ந்துள்ள தமிழ் மக்கள் ஒருபோதும் டெல்லியின் ஆதிக்கத்தையும், அதன் அடிமைக் கூட்டத்தையும் அனுமதிக்க மாட்டார்கள்.

சுயநலனுக்காகச் சொந்தக் கட்சியை அடமானம் வைத்ததுபோல, தமிழ்நாட்டையும் டெல்லியிடம் அடகு வைக்கத் தயங்காதவர்கள் அவர்கள்.

இனி எதிர்க்கட்சியினர் எடுக்கும் முடிவு என்பது டெல்லி எடுக்கும் முடிவுதான்!

**– முதல்வர் மு.க.ஸ்டாலின்**

## உள்நாட்டு உற்பத்தியாளர்களைப் பாதுகாக்க

# அவசர நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## நாடாளுமன்றத்தில் – கே.இ.பிரகாஷ் வலியுறுத்தல்!



*புதுடெல்லி, மார்ச் 22 -*

*இந்தியாவிற்குள் இறக்குமதி செய்யப்படும் Finished upvc பொருட்கள் அசுர வேகத்தில் அதிகரித்துள்ளதால், உள்நாட்டு சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் சந்திக்கும் நெருக்கடிகள் குறித்து ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே. இ.பிரகாஷ் மக்களவையில் உரை சமர்ப்பித்தார். நாடாளுமன்ற விதி 377ன் கீழ் இப்பிரச்சினையை எழுப்பிய அவர், உள்நாட்டுத் தொழில்துறையை பாதுகாப்பதற்கான உரிய நடவடிக்கைகளை ஒன்றிய அரசு அவசரமாக எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.*

*அகில இந்திய uPVC உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தரவுகளைச் சுட்டிக்காட்டிய அவர், கடந்த டிசம்பர் 2022 முதல் நவம்பர் 2025 வரையிலான காலக்கட்டத்தில் மட்டும் சுமார் 2,86,398 மெட்ரிக் டன் எடையுள்ள Finished uPVC பொருட்கள் இந்தியாவிற்குள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். குறிப்பாக, 2023 ஆம் ஆண்டில் 76,075 மெட்ரிக் டன்னாக இருந்த இறக்குமதி அளவு, 2025ஆம் ஆண்டில் 1,05,926 மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.*

*இந்த இறக்குமதியில் பெரும் பகுதி சீனாவிலிருந்து வருவதாகவும், அவற்றின் சராசரி விலை ஒரு கிலோவிற்கு சுமார் 92 ரூபாய் மட்டுமே என்றும் அவர் குறிப்பிட்டார்.*

*இந்தியாவில் ஒரு கிலோ uPVC தயாரிப்பதற்கான விலை 135 ரூபாய் முதல் 160 ரூபாய் வரை இருக்கும் சூழலில், சீனாவிலிருந்து அவை வெறும் 85 முதல் 100 ரூபாய் வரை இந்தியச் சந்தைக்குள் நுழைவது இந்திய உற்பத்தியாளர்களைச் சந்தையிலிருந்து வெளியேற்றும் என்று அவர் எச்சரித்தார்.*

*மேலும், uPVC தயாரிப்பதற்கான மூலப்பொருட்களுக்கு AntiDumping வரி விதிக்கப்படும் நிலையில், முழுமையாக முடிக்கப் பட்ட இறக்குமதிப் பொருட்களுக்கு அடிப்படை சுங்க வரி மட்டுமே விதிக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.*

*இந்த வரிச் சலுகையைச் சாதகமாக்கிக் கொண்டு சீனப் பொருட்கள் இந்தியச் சந்தையை ஆக்கிரமித்து வருவதாகவும், இது உள்நாட்டு உற்பத்தியாளர்களின் வளர்ச்சியைத் தடுத்து, லட்சக்கணக்கான வேலை வாய்ப்புகளை கேள்விக்குறியாக்கியுள்ளதாக அவர் கவலை தெரிவித்தார்.*

*உள்நாட்டுத் தொழில் நிறுவனங்களை பாதுகாப்பதற்கு உடனடியாக தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று, திரு.கே.இ.பிரகாஷ் ஒன்றிய அரசை வலியுறுத்தினார்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கீரை ஆ. தமிழ்ச்செல்வன்

### மார்ச் 22 (1997)



**புதுக்கோட்டை மாவட்டக் கழக துணைச் செயலாளராகவும் – குன்றாண்டார்கோவில் ஒன்றியக் கழகச் செயலாளராகவும் பணியாற்றியவர்.**

**மாவட்ட ஊராட்சி துணைத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**“கடுமையான சோதனைகள், கொடிய அடக்குமுறைகள், கழகத்தை தாக்கியபோதெல்லாம் அந்தக் கழகக் காளை நெஞ்சுயர்த்தி நிமிர்ந்து நின்று இந்த இயக்கத்தைக் காத்து நின்ற காட்சியை எண்ணிப் பார்க்கிறேன். தனது கனிவான நடைமுறையினால் கழக உடன்பிறப்புக்களைக் கவர்ந்து நின்ற பாங்கினை நினைத்துப் பார்க்கிறேன்” என தலைவர் கலைஞர் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## கட்டுமானப் பணிகளில் அசாதாரண தாமதம் ஏன்?

# மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை எப்போது கட்டி முடிக்கப்படும்?

## மக்களவையில் – டி.எம்.கதிர்ஆனந்த் கேள்வி!



*புதுடெல்லி, மார்ச் 22 -*

*மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானப் பணிகளில் அசாதாரண தாமதம் ஏன்? எப்போது கட்டி முடிக்கப்படும் என்று மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.*

*மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனையின் கட்டுமானப் பணிகள் மிகவும் தாமதமானதற்கான காரணம் என்ன? மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானப் பணிகள் விரைந்து முடிக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை?*

*மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானப் பணிகளுக்கு ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA) மற்றும் ஒன்றிய அரசு இதுநாள் வரை வழங்கிய நிதி விவரங்கள் தருக?*

*மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுவதற்கு இதுகாறும் செலவிடப்பட்ட நிதி விவரங்கள் மற்றும் மதுரை எய்ம்ஸ் கட்டி முடிக்கப்படும் உத்தேச காலஅவகாசம் என்ன?*

*நாட்டின் பல்வேறு இடங்களில் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுவதற்கு இதுவரை ஒதுக்கப்பட்ட மற்றும் செலவிடப்பட்ட நிதி விவரங்கள், எய்ம்ஸ் மருத்துவமனை வாரியாக தருக? என மக்களவையில் டி.எம்.கதிர்ஆனந்த் கேள்வி எழுப்பினார்.*

*இதற்கு ஒன்றிய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகத்தில் ராஜாங்க அமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் கீழ் வருமாறு:*

*பிரதம மந்திரி ஸ்வஸ்த்ய சுரக்ஷா யோஜனா (பிஎம்எஸ்எஸ்ஒய்) கீழ், அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகம் (எய்ம்ஸ்) மதுரையை நிறுவ ரூ. 2021.51 கோடி மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டது. இதில் ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகமையின் (JICA) கடன் கூறு ஜப்பானிய யென் 22,788,000,000 மட்டுமே. (ரூ.1321 கோடி)*

*இதுவரை, ஒன்றிய அரசு அமைச்சகம் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்ட 471.02 கோடி ரூபாய் செலவழித்துள்ளது. மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையின் குடிமராமத்து பணிகளின் தற்போதைய முன்னேற்றம் 47% ஆகும். மார்ச் 2021 இல் ஜப்பான் அரசாங்கத்திற்கும் இந்திய அரசாங்கத்திற்கும் இடையில் கையெழுத்திடப்பட்ட கடன் ஒப்பந்தத்தின்படி, திட்டப்பணியை நிறைவு செய்வதற்கான இலக்கு தேதி அக்டோபர் 2026 ஆகும்.*

*மதுரை எய்ம்ஸ் திட்டங்களின் நிறைவானது, மாநில அரசு, ஒழுங்கு முறை அனுமதிகள் மற்றும் தளம் சார்ந்த சிக்கல்கள் உள்ளிட்ட பல்வேறு காரணிகளைப் பொறுத்தது. திட்டத்தின் முன்னேற்றம் நிறுவனம் மற்றும் அமைச்சகத்தின் மட்டத்தில் அனைத்து பங்குதாரர்களுடன் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது.*

*இத்திட்டத்தை சுமுகமாக செயல்படுத்துவதைக் கண்காணிக்கவும், வசதி செய்யவும் தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலாளர் (சுகாதாரம்) தலைமையில் ஒரு வழிகாட்டுதல் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.*

*மேலும் நாட்டில் பல்வேறு இடங்களில் உள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தின் (எய்ம்ஸ்) நிலை இணைப்பில் தரப்பட்டுள்ளது.*

*அதன் படி தமிழ் நாட்டில் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை, ஹரியானாவில் ரேவரி எய்ம்ஸ் மருத்துவமனை, காஷ்மீர் அவந்திபுரா எய்ம்ஸ் மருத்துவமனை ஆகிய மூன்று இடங்களில் கட்டுமானப் பணிகள் முழுமையாக நிறைவு பெறவில்லை என்பது தெரிகிறது.*

*இவ்வாறு அவர் பதிலளித்தார்.*

## தமிழ்நாட்டில் உள்ள வேளாண் அறிவியல் மையங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

# கடந்த மூன்று ஆண்டுகளில் அதற்கு செலவிடப்பட்ட நிதி எவ்வளவு?

## மக்களவையில் – தே.மலையரசன் கேள்வி!



*புதுடெல்லி, மார்ச் 22 -*

*கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன் மக்களவையில் எழுப்பிய கேள்வி பின் வருமாறு:*

*தமிழ்நாட்டில் தற்போது செயல்பட்டு வரும் வேளாண் அறிவியல் மையங்களின் (KVKs) எண்ணிக்கை மற்றும் அடுத்த 5 ஆண்டுகளில் நிறுவப்படவுள்ள மொத்த (KVKs) எண்ணிக்கை எவ்வளவு?*

*தற்போதுள்ள KVKS களை வலுப்படுத்தவும், விவசாயிகளுக்கு மேம்பட்ட வேளாண்மை அறிவு, தொழில்நுட்பம் மற்றும் விரிவாக்க சேவைகளை வழங்கும் அவற்றின் திறனை மேம்படுத்தவும் ஒன்றிய அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன?*

*KVKS களின் தற்போதைய செயல்பாட்டில் ஒன்றிய அரசு ஏதேனும் சவால்களையோ அல்லது குறைபாடுகளையோ கண்டறிந்துள்ளதா ? அவற்றை நிவர்த்தி செய்ய எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் என்ன?*

*கடந்த 3 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் KVKS களை வலுப்படுத்தவும் விரிவாக்கவும் ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதி எவ்வளவு?*

*விவசாயிகளுக்கான விரிவாக்க சேவைகளை மேம்படுத்துவதற்காக, KVKS களின் செயல்பாடுகளில் டிஜிட்டல் கருவிகள், செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் தரவு பகுப்பாய்வு போன்ற நவீன தொழில் நுட்பங்களை ஒருங்கிணைக்க ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ள விதம் என்ன?*

*தமிழ்நாட்டில் வேளாண் உற்பத்தித்திறன், விவசாய வருமானம் மற்றும் நிலையான விவசாய நடைமுறைகளை ஊக்குவிப்பதில் KVKs களின் தாக்கம் என்ன?*

*இவ்வாறு தே.மலையரசன் கேள்வி எழுப்பினார்.*